# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

அக்டோபர் - OCTOBER
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-


**சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.**

2 கொரிந்தியர் 2:11


ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 7

வாலிபர் பகுதி 9

சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**



**ஆசிரியர் குழு**

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி கிங்ஸ்லி** B.B.A.,

**சட்ட ஆலோசகர்கள்**

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### தமிழன் T.V. யில்

**ஞாயிறு காலை 7.00 மணி**

### நம்பிக்கை T.V. யில்

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள்
மற்றும் திருமண நாள் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
அன்பின் வாழ்த்துக்கள்...


### கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்



அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும்
உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.
ரூபாய் 100/– மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

### தபால் வழி பைபிள் பாடங்கள்



### கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

**கிருபையுள்ள வார்த்தை**
சத்துருவின் வஞ்சனைக்கு நம்மை
விலக்கி காக்கும் சர்வ வல்லவரின் வார்த்தை

YouTube
@graciouswordcoc



World Literature Publication : Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா



# வஞ்சிக்கப்படாதிருங்கள்
# Do not be decieved

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், அன்பின் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஈடற்ற பெயரால், எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்.

1 கொரிந்தியர் 6:9ல் பரிசுத்த ஆவியானவர் சபைக்கு விடுத்த அறைகூவல் ‘‘வஞ்சிக்கப் படாதிருங்கள்” என்பதாகும். ஆகையால் இந்த மாதம்; வஞ்சிக்கப்படுதல் என்பதனை பற்றிய ஒரு பைபிள் பாடத்தினை தியானம் செய்வோம்.

## 1. வஞ்சனை என்றால் என்ன?

1தீமோத்தேயு 2:13,14 என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.

பரந்து விரிந்த இந்த உலகம், மிகவும் வஞ்சனை (ஏமாற்றுதல்) நிறைந்ததாகவே இருக்கின்றதினை நாம் அறிவோம். வஞ்சனை என்பதனை, நம்ப வைத்து துரோகம் செய்தல், ஆசை காண்பித்து மோசம் செய்தல், கண்ணியில் விழ வைக்க தந்திரமாக ஏமாற்றுதல் என்றெல்லாம் சொல்லப்படுவதினை நாம் அறிவோம்.

இந்த வஞ்சனையை சத்துருவானவன் முதன் முதலில் இந்த உலத்திற்குள் கொண்டுவந்து, உயிருள்ள அனைவருக்கும் தாயாகிய ஏவாளை ஏமாற்றினான் (கண்ணியில் விழ வைத்தான்) என்பது நாம் அறிந்ததே. அவர்களுக்கு நன்மை செய்வது போல தன்னை காண்பித்து, பயங்கரமான தீமையை வருவித்தான். இந்த சரித்திர பதிவினை ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் நாம் படிக்கின்றோம்.

ஆகையால், நமது தாயாகிய ஏவாள் ஏன் மற்றும் எவ்விதம் வஞ்சிக்கப்பட்டாள் என்பதனை நாம் அறிந்து, சத்துருவானவனின் சதிக்கு நம்மை விலக்கி காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அவனது தந்திரங்களை நாம் அறிந்திருக்க வேண்டும். அவைகளை நாம் அறியவில்லை எனில் நாம் மோசம் போய்விடும் அபாயம் உண்டு. 2கொரிந்தியர் 2:11 “சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு, அப்படிச் செய்தேன். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே”

மேலும், சத்துருவானவன் நம்மை விழ வைக்க கெர்சிக்கின்ற சிங்கம் போல சுற்றித்திரிகின்றான் என்றும் எச்சரிக்கின்றது (1பேதுரு 5:8).

மேலும், சத்துருவானவன் ஏவாளை வஞ்சித்து பரலோக பிதாவினைவிட்டும் அவரது உண்மையை விட்டும் பிரித்ததுபோல, நம்மையும் கிறிஸ்துவை பற்றும் உண்மையினின்று பிரித்துவிடக்கூடியவனாக இருக்கின்றான். அவ்வாறு பிரிக்க நம் மனதினை கெடுக்ககூடியவனாக இருக்கின்றான் என்று பைபிள் நம்மை எச்சரிக்கின்றது. 2கொரிந்தியர் 11:3 ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன். ஆகையால், நமது தாயாகிய ஏவாள் வஞ்சிக்கபட்டது போல, நாமும் வஞ்சிக்கபடாதிருக்க, நமது தாயாகிய ஏவாள் ஏன் மற்றும் எவ்விதம் வஞ்சிக்கப்பட்டாள் என்பதனை அறிந்துகொள்வோம்.

## 2. எவ்விதம் வஞ்சிக்கப்பட்டாள்?

ஆதியாகமம் 3:1,4,5 தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

ஏவாள் முதலில் சத்துருவானவன் சொல்வதினை கேட்டாள். அதாவது கர்த்தர் விலக்கின, வேண்டாம் என்று ஒதுக்கின ஒன்றைப் பற்றி சத்தருவானன் சொல்வதினை கேட்டாள். கர்த்தர் வேண்டாம் என்று ஒதுக்கிய ஒவ்வொன்றும் நமக்கு தீமையாகும். கர்த்தர் சொன்னவற்றிற்கு மாற்றி சொல்லுகின்ற எதனையும்,

யார் சொன்னாலும் நாம் கேட்க கூடாது அது தீமையை கொண்டு வரும். ஏவாள் செய்ததும் மற்றும் அடைந்ததும் அது தான்.

கிறிஸ்துவின் போதனைகளுக்கு விரோதமான போதனைகளை பற்றி பேசுவதினை காதுகொடுத்து கேட்க வேண்டாம் என்று, பைபிள் நம்மை எச்சரிக்கின்றது. அப்படி பேசுபவர்கள் எவ்வளவு பெரிய பிரசங்கியார், போதகராக, பாஸ்டராக (மூப்பராக) இருந்தாலும், அவர்களை நம் வீட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்றும் எச்சரிக் கின்றது. அவர்கள் தான் அந்திகிறிஸ்துக்கள், ஆகையால் அவர்களுக்கு வாழ்த்துதல்கூட சொல்ல வேண்டாம் என்கின்றது (2 யோவான் 1:7-11).

ஆயினும் கடைசி நாட்களில் மக்கள் சத்தியத்தினை விரும்புவதினைவிட, தங்கள் மனதிற்கு ஏற்றாற்போல் பேசும் போதகர்களை நோக்கி செல்வோர் என்றும் ஏனெனில் சத்தியத்தினைவிட கட்டுகதைகளுக்கு மக்கள் சாய்ந்து போகின்ற காலம் இது என்றும் எச்சரிக்கின்றது (2தீமோத்தேயு 4:3,4). ஆம், பரலோகம், நரகம் மற்றும் பாதாளத்திற்கு யாராவது சென்று வந்தேன், நேற்று இரவில் தரிசனத்தில் கர்த்தர் பேசினார் என்று நூதனமான காரியங்களை, கட்டுகதைகளை பைபிளிற்கு முரணாக பேசுவோர் பின்னே மக்கள் அப்படிபட்டவர்கள் நரகத்திற்கு செல்கின்றார்கள் என்பதனை அறியாமல், கூட்டம் கூட்டமாக அவர்கள் செல்லும் நரகத்தினை நோக்கி செல்கின்றனர். இது மிகவும் வேதனையான ஒன்று, ஆயினும் இது நடக்கும் என்று, பரிசுத்த ஆவியானவர் முன்னமே எச்சரித்தார் (அப்போஸ்தலர் 20:30). ஆயினும் அன்று ஏவாள் செய்த அதே தவறை இன்று அநேகர் செய்கின்றனர்.

ஆதியாகமம் 3:2,3 ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

அடுத்தாக, ஏவாள் தீமையைப் பற்றி பேசினாள். தீமையை பற்றி கேட்டாள், நாமும்கூட தீமையை பற்றி தான் பேசுவோம். தவறான போதனைகளை கேட்பதின் விளைவு, நாமும் தவறான போதனைகளை பேசுகின்றவர்களாக மாறிவிடுவோம். ஆகாத சம்பாஷனைகள் (உரையாடல்கள்) நல்ல ஒழுக்கங்களை கெடுக்கும், ஆகையால் மோசம் போகாதிருங்கள் என்று பைபிள் எச்சரிக்கின்றது (1கொரிந்தியர் 15:33).

பைபிளோடு ஒன்றையும் கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது என்பது நாம் அறிந்ததே (வெளிப்படுத்தல் 22:18). ஆனால், தவறான போதனைகளை கேட்கின்றவர்களாக நாம் இருந்தால், பேசுகிகன்றவர்களாகவும் மாறிவிடுவோம். இப்பொழுதெல்லாம் தவறான போதனைகள் தொலைகாட்சிகள் மூலமாகவும், நமது கைகளில் உள்ள செல்போன்கள் மூலமாகவும் நம்மை நோக்கி வந்துவிட்டன. அவைகளை கேளாமால் தவிர்ப்பதே நல்லது. நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினுடைய போதனைக்கு விரோதமாக பேசுவதென்பது, அவரது போதனைகளை புறந்தள்ளுவதாக இருக்கின்றது. அது மாபெரும் விளைவுகளையும் தண்டனைகளையும் கொண்டு வந்து சேர்க்கும். ஆகையால் கவனம் தேவை (யோவான் 12:48).

ஆதியாகமம் 3:6 அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான்.

அடுத்தாக, ஏவாள் தீமையைப் பார்த்து ரசித்தாள். அதனை பார்வைக்கு இன்பம் என்று கண்டாள். தீமையை கேட்டது, அதனை பற்றி பேச வைத்தது, அடுத்ததாக அதனை பார்க்க வைத்தது. என் விருப்பம் நான் எதை வேண்டுமோ பார்ப்பேன், பார்ப்பதினால் என்ன ஆகிவிட போகின்றது, கண்களை படைத்ததே பார்த்து ரசிக்கத்தான் என்போரே, கவனம்! எதனை பார்க்கின்றோம் என்பதனை குறித்து நமக்கு மிகுந்த கவனம் தேவை. தேவையற்றதினை பார்ப்பது தேவையற்றதினை செய்ய தூண்டும்.

ஒரே பார்வை லோத்தின் மனைவி உப்புத்தூண் ஆனாள். அவளது பிள்ளைகள் தறிகெட்ட வாழ்வினை நோக்கி சென்றனர். நீதிமானகிய அவள் கணவன் மதுபானத்தினால் வெறிக்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டான். ஒரு பார்வை, ஒரே பார்வை அதுவும் ஓரப்பார்வை ஒரு குடும்பத்தினை ஒன்றுமில்லாமல் செய்தது (ஆதியாகமம் 19). ஆபிரகாம், மோசேக்கு பின்பு பழைய ஏற்பாட்டில் பெரிதாக பேசப்பட்ட தாவீது, ஒரு

முறை தேவையற்றதினை பார்த்ததினால், கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவனாகிய அவன் விபச்சாரம் செய்தான். கர்த்தருக்கு பயந்ததினால், தன்னை கொலை செய்ய வந்த சவுலை கொல்லாதவன். தனக்காக, தன் ஜீவனை பெரிதாக எண்ணாமல் உண்மையாய் உழைத்த தனது மெய்காப்பளர்களில் ஒருவனாகிய உரியவை தந்திரமாக, அநியாயமாக கொன்றான் (2சாமு. 12). அது மாத்திரமா? அதன் விளைவு தன்னுடைய பிள்ளைகள் அயோக்கியர்களாவும், கொலைகாரர்களாவும் மாறிட வழி வகுத்தது.

மத்தேயு 6:22,23 கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும். இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! கண்ணானது சரீரத்தின் விளக்கு அதனால் பார்ப்பதினை குறித்து கவனமாயிருங்கள், நீங்கள் தேவையற்றதினை பார்ப்பதினால், உங்கள் பார்வை இருளாகிவிடுகின்றது, அதனால் உங்கள் வாழ்வே இருளாகிவிடும் என்று ஆண்டவர் இயேசு எச்சரித்தார். அதனை நாம் சிந்திக்க வேண்டும்.

## 3. ஏன் வஞ்சிக்கப்பட்டாள்?

ஆதியாகமம் 3:6 அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான்.

ஏவாள் எவ்விதம் வஞ்சிக்கபட்டாள் என்பதனை அறிந்த நாம், அவள் ஏன் வஞ்சிக்கப்பட்டாள் என்பதனையும் அறிய வேண்டும். ஏவாள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டாள் என்பது அவள் தீமையை விரும்பினாள் என்பதாகவே இருக்கின்றது. தீயவற்றின் மீது நாம் கொள்ளும் விருப்பம் என்பது நம்மை தவறிபோகச்செய்யும். ஆகையால் தான் பைபிள் நம்மை தீயவற்றை வெறுக்க சொல்கின்றது.

கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள்.. சங்கீதம் 97:10. மேலும், தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயந்து வாழ்கின்ற ஞானமான வாழ்வாக இருக்கின்றது (நீதிமொழிகள் 8:13).

பைபிள், நம்மை தீமையை வெறுத்துவிடுங்கள் (ஆமோஸ் 5:15, ரோமர் 12:9) உன் நடுவிலிருந்து விலக்கிவிடுங்கள் (உபாகமம் 19:19, 21:21, 22:22), அதனை விட்டு விலகிவிடுங்கள் (நீதிமொழிகள் 3:7, 13:19. 16:6), மற்றும் அதனை தொடதேயுங்கள் (2கொரிந்தியர் 6:17, ஏசாயா 52:11, எண்ணாகமம் 16:26) என்றெல்லாம் எச்சரிக்கின்றது. ஏனெனில், தீமையை விரும்பதினால் தான் மனிதன் பாவம் செய்கின்றான் என யாக்கோபு நிருபத்தில் பரிசுத்த ஆவியானவர் அவனவன் சுய இச்சையினாலே சோதனைக்கு உட்படுகின்றான் என்று எச்சரிக்கின்றார் யாக்கோபு 1:14-16 அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். என் பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள்.

தீமையை விரும்பிய ஏவாள், அடுத்தாக அந்த தீமையை நல்லது என்று நம்பினாள். கர்த்தர் கெட்டது என்று சொன்னது அவளுக்கு இப்பொழுது நல்லதாக தெரிகின்றது. இந்த பழம் உண்பதற்கு நல்லது என்று நம்பினாள். விருப்பம் செய்ய தூண்டினாலும், அவைகளில் கொஞ்சம் தயக்கம் இருக்கலாம். ஆனால் நம்பிக்கை தான் நமக்கு துணிவை கொடுக்கும்.

ஏவாள், சத்துருவின் பேச்சினை நம்பினால், தீமையற்றதினை கேட்பது நமக்கு அதின் மீது நம்பிக்கை வர தூண்டுவதாக இருக்கின்றது. நமக்கு நாம் கேட்பவற்றை குறித்த கவனம் தேவை. எதனை கேட்கின்றோமா அதனை நம்புவது நம் இயல்பாக இருக்கின்றது. விசுவாசம் என்பது கேள்விபடுதலினால் வரும் (1கொரிந்தியர் 10:17) என்று பரிசுத்த ஆவியானவர், பவுலின் மூலம் கொரிந்து சபையாருக்கு வெளிப்பத்தினார். தவறான உபதேசங்களை கேட்பது, நமக்கு அவைகளின் மீது நம்பிக்கை வர தூண்டும். பைபிளை தவிர நமக்கு வேறு ஒரு ஆதாரமும் தேவையில்லை. அதனை தவிர்த்தோ, தாண்டியோ தங்கள் மனதில் தோன்றியதினை உபதேசமாக பேசுவோரைவிட்டு விலக வேண்டியது அவசியமாகும் (தீத்து 3:10). அவர்கள் என்ன சொன்னாலும் அதனை நம்ப

வேண்டாம் என்று நம் ஆண்டவர் இயேசு நம்மை எச்சரித்துள்ளார் என்பதனை மறக்க வேண்டாம். மத்தேயு 24:23 அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்.

நமது தாயாகிய ஏவாளிற்கு, துன்பத்தினை வரவழைக்ககூடிய பாவம் இன்பமாகவும், தனக்கும் தன் சந்ததிக்கும் தீமையை பரிசளிக்ககூடிய பாவம் நன்மையாகவும், ஞானத்தினை அழித்து முட்டாளக்ககூடிய பாவம் புத்தியாகவும் தோன்றியது. காரணம் என்ன? அவள் தீமைக்கு மயங்கிவிட்டாள். இந்த பழத்தினை சாப்பிட்டால், நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்று தேவன் அறிவார் என்ற புகழ்ச்சிக்கு மயங்கிவிட்டாள்.

ஒரு மனிதனிற்கு ஏற்படும் புகழ்ச்சியே அவனுக்கு மிகப்பெரிய சோதனை என்று பைபிள் நம்மை எச்சரிக்கின்றது (நீதிமொழிகள் 27:12). அதனால் தனது மாம்சத்திற்கும் மனதிற்கும் தீனிப்போட்டாள் மற்றும் அதனை தன் கணவனுக்கும் கொடுத்தாள். பாவத்தின் மீது ஏற்படும் மயக்கம் என்பது, நாம் கெட்டொழிவது என்று நில்லாமல், நம்மை சார்ந்தவர்களையும் கெட்டொழிந்துபோக நம்மை வழிநடத்த வைக்கும். உதாரணமாக இன்று மதுபான வெறியர்களாக மாறிப்போனவர்களிடம் ஏன் இப்படி இந்த பாவத்திற்கு அடிமையானீர்கள்? எங்கே இதை பழகினீர்கள்? என்று வினாவினால், பொதுவாக அவர்கள் சொல்கின்ற பதில் நண்பர்கள் அல்லது உறவினர்கள் யாரோ ஒரு முறை செய்து பார் என்று சொன்னதின் விளைவே என்று சொல்வார்கள். அது தான் பாவத்தின் மீது மனிதன் கொண்ட மயக்கம் மற்றவர்களையும் தவறான பாதையினை நோக்கி வழிநடத்த தூண்டும்.

பிரியமானவர்களே! இன்றைய நாட்களில் நாம், சத்துருவானவன் நம்மை வஞ்சியாதிருக்க, நமது தாயாகிய ஏவாளிடமிருந்து கற்றதினை நினைவில்கொண்டு, ஞானமாக செயல்பட வேண்டும். மேலும் சத்துருவானவன் நம் தேவையை கொண்டு நம்மை சோதிப்பான் (லூக்கா 4:3,4), நம் குறிக்கோளைக் கொண்டு நம்மை சோதிப்பான் (லூக்கா 4:6,7), மற்றும் நம் நம்பிக்கையைக் கொண்டு நம்மை சோதிப்பான் (லூக்கா 4:8-10). ஆகையால் வேத வசனம் சொல்வது போல, நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருப்போம் (எபேசியர் 4:14,15). கர்த்தர் தாமே நம்மை காத்து வழிநடத்துவராக. ஆமென்.

– அன்புடன், ஆசிரியர்

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil: Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil: Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**
**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# நாவு



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! யாவருக்கும் ஆண்டவர் இயேசு இராஜாவின் பெயரில் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் நாம் நம் நாவை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வேதத்திலிருந்து கற்றுக் கொள்வோம்.

**1) நாம் நம் நாவை எவ்வாறு பயன்படுத்து கின்றோம் மொத்தமாக பட்டியலிடுவோம்:**

**அ) கற்பித்தல்:** 1) யாக்கோபில் நம்முடைய உரையின் முதல் குறிப்பு (யாக். 1:26ல்) உள்ளது, "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்"

குதிரையை கட்டுப்படுத்த அதன் வாயில் ஒரு துண்டு போடுவது போன்ற சித்தரிப்பு படம் இது.

இந்த வகையாக நபர் எப்போதும் தனது சொந்த கருத்துக்களைக் கூறி, காட்டு குதிரையைப்போல மக்களை சேதப்படுத்துவார்.

நாம் கடிவாளத்தை நம் வாயில்தான் வைக்க வேண்டும், பிறரின் வாயின் மீது அல்ல.

நாம் நம் நாவை, பேச்சை கட்டுப்படுத்தாமல் கடவுளுக்கு நாம் செய்யும் தொழுகை வீணானது.

**2) அடுத்து அவர் அதிக கற்பனைகளுடன் கொண்டு வருகிறார்** (3:1-12) மேலும் கற்பிப்பதில் நம் மொழிகளைப் பயன்படுத்துவதன் பிண்ணனியில் விரிவாகக் கூறுகிறார்.

உங்களை நீங்களே ஏமாற்றுகிறீர்களா?

நம்மில் அநேகர் பிரசங்கியாராக வேண்டாம் என்று யாக்கோபு ஏன் கூறுகிறார்? (நீதி. 10:19).

**3) இந்த பிரிவு நாவின் பயன்பாட்டைப் பற்றியது.** ஆனால், சூழலை மனதில் கொள்ளுங்கள் கற்பிக்கும்போது,

**"போதிப்பதை"** ஊக்கமின்மைப் பயன்படுத்துவது யாக்கோபின் குறிக்கோள் அல்ல, மாறாக முறையற்ற கற்பித்தல் மற்றும் தகுதியற்ற ஆசிரியர்களை ஊக்கமின்மை செய்வதாகும்.

பலர் அதிகமாக கற்றுக்கொள்ளத்தக்கதாக ஆசிரியர் களாக இருக்க விரும்புகிறார்கள் (எபி. 5:12).

சில நேரங்களில் ஆரம்பகால கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள் வைராக்கியமாக இருக்கிறார்கள், உடனடியாக கற்பிக்கத் தொடங்க விரும்புகிறார்கள்.

பெரும் பொறுப்புடன் அதிக தீர்ப்பு வருகிறது (மத். 18:6,7).

**4) ஒரு ஆசிரியர் அவர்களின் வார்த்தைகளை கருதுவது, சிந்திப்பது ஏன் முக்கியம்?**

நம் ஆத்துமாவிற்கு (மாணவர்களின்) கவனிப்பவர் களின் ஆத்துமாவிற்கும் ஆபத்தாகிவிடும் (மத். 12:36, 37).

**5) யாக்கோபு இவ்வாறாக குறிப்பிடுகிறார் (3:2) தன் நாவை அடக்குகிறவன் தன் பேச்சில் தடுமாறமாட்டார்.**

இவ்வாறு சொல்வது நியாயமாக இருக்கும், தங்கள் வார்த்தைகளில் கண்டிப்புடன் இருப்பவர்கள் செயல்களிலும் கவனமாக இருப்பார்கள்.

(தொடர்ச்சி... ௮ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ"

## வேங்கை



வேங்கை எனப்படுவது நடுத்தர அளவிற் பெரியதான இலையுதிர் தாவரம் ஒன்றாகும். இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளைத் தாயகமாகக் கொண்டதான இம்மரம் இந்தியாவின் கேரள-கருநாடக எல்லையில் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் இலங்கையின் மத்திய மலைநாட்டிலும் காணப்படுகிறது.

இந்த மரம் 30 மீ உயரம் வரை வளரக் கூடியது. இதன் இலைகள் ஐந்து கூட்டிலைகளைக் கொண்ட கொத்தாக இருக்க, இலைநுனி வளைந்திருக்கும். மரத்தின் பால் கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

வேங்கை மரத்தின் (வைரம், இலைகள், பூக்கள் உட்பட) பல்வேறு பகுதிகளும் நெடுங்காலமாக ஆயுர்வேத மருத்துவத்திற் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. வேங்கை மரவைரம் காயங்களை மூடவும், எரிவு மற்றும் நீரிழிவு போன்றவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

நமது வார்த்தைகளின் விளைவுகள் பேரழிவாக இருக்கலாம். (நீதி. 11:13;16:28; 25:9,10; 26:20).

### 6) நாவின் மூன்று ஒப்பீடுகள் விளக்கப் பட்டுள்ளன: (யாக். 3:3-6)

**1) குதிரையின் கடிவாளம்**

அ) சிறிய விஷயம் ஒரு பெரிய மிருகத்தை கட்டுப்படுத்துகிறது.

ஆ) ஆற்றல் உள்ள விலங்குகளால் நாம் இதுபோன்ற செயல்களைச் செய்ய முடிந்தால். நாம் நம் நாவை கட்டுப்படுத்துவதன் மூலம் நம்மை கட்டுப்படுத்த முடியாதா?

**2) கப்பலின் சுக்கான்**

அ) மறுபடியும் இங்கு நாம் காண்பது ஒருசிறய பெருள் பெரிய காரியத்தை பாதிக்கிறது.

ஆ) சிறிய நாக்கு சுமார் 70 கிராம் எடையுள்ளதாக இருந்தாலும் அதன் சக்தி மிகவும் பெரியது. அது முழு உடலை மட்டுமல்ல, எண்ணற்ற மற்றவர்களில் உடல்களையும் திருப்ப முடியும். பல குடும்பங்கள் உடைந்துவிட்டன. தேவனுடைய சபை பிரிவு இவையெல்லாம் ஒரு சிறிய நாவினால்தான்.

### 7) காட்டுத் தீயில் எரிதல்:

அ) ஒரு சிறிய தீக்குச்சி சமையல் செய்வதற்கான ஒரு அடுப்பை பற்ற வைக்க அல்லது ஒரு முழு வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தீப்பிடிக்க வைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

ஆ) நெருப்பு என்பது தேவனிடத்திலிருந்து நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதம். ஆனால் அதை சரியாக பயன்படுத்த வேண்டியது நமது கடமை.

இ) அதுபோல நாவும் கடவுளின் ஆவியால் மனிதர்களின் இதயத்தை இதமாக வைப்பதற்கும் முடியும். பிசாசின் ஆவியால் தீங்கு அழிவை ஏற்படுத்த முடியும்.

ஈ) அக்கிரமம் நிறைந்த உலகம், உருவகம் பிரச்சனையின் கடல், துன்மார்க்கத்தின் வெள்ளம்.

உ) வாழ்க்கையின் போக்கு, நாம் தனியாக இந்த உலகத்தில் வாழவில்லை. எனவே, ஒரு வீட்டில் தீப்பிடித்தால் அது வேகமாக எல்லா வீட்டிலும் பரவிவிடும். நமது பேச்சு வார்த்தை பிறரை அப்படியே பெரிதாக தாக்கும்.

ஊ) **“நரகம்”** கிரேக்க வார்த்தை “கெஹன்னா” நித்திய தண்டனை என்பதின் வார்த்தை.

நாவு நெருப்பின் மூலக்காரணம் நரகம்.


ஆம் பிரியமானவர்களே! வசனத்தின் மூலம் நாவின் பயன்பாட்டுகளைத் தெரிந்துக்கொண்ட நாம் அவற்றை நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவோம். அவரைப் பற்றி தினந்தோறும் பிறருக்கு சொல்ல பயன்படுத்தி தேவ ஆசீர்வாதம் பெறுவோம்.

தமிழாக்கம்: சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## பொதுவான செய்திகள்

முன் மாதத் தொடர்ச்சி...

## இந்தியாவின் முதல் அச்சகம் மற்றும் அது இப்போது இருக்கும் இடம் பற்றிய அனைத்தும்:



1708 ஆம் ஆண்டு, பைபிளின் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்க்கும் முயற்சியை அவர் தொடங்கினார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சவாலான பணியை அவர் முடித்தார். கையால் எழுதப்பட்ட மொழிபெயர்ப்புகளின் சவாலை ஒப்புக்கொண்டு, டென்மார்க் மன்னரிடமிருந்து ஒரு அச்சு இயந்திரத்தை நாடினார். தமிழ்நாட்டிற்கு அச்சு இயந்திரத்தை முதன்முதலில் கொண்டு வந்தவர் அவர்தான். இந்த அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கான முறை முதலில் எழுத்துக்களை வரிசைப்படுத்தி, அவற்றின் மீது மை தடவி, பின்னர் ஒரு வெள்ளைத் தாளில் அச்சிடுவதாகும்.

அந்தக் காலகட்டத்தில், அனைவரும் அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி கடிதப் பரிமாற்றம் செய்தனர், இது தட்டச்சு அமைப்பு முறை எனப்படும் தனிப்பட்ட எழுத்துக்களைப் பயன்படுத்தி இயக்கப்பட்டது. 1713 ஆம் ஆண்டில், புதிய ஏற்பாட்டின் அச்சிடுதல் தொடங்கியது, கிட்டத்தட்ட இரண்டு வருட தொடர்ச்சியான முயற்சிக்குப் பிறகு, ஜூலை 15, 1715 அன்று பணி முடிக்கப்பட்டது. குறிப்பாக, தமிழில் வெளியிடப்பட்ட முதல் புத்தகம் துருக்கல். சீகன்பால்க் பயன்படுத்திய மர அச்சு இயந்திரம் அவரது மரணத்திற்குப் பல தசாப்தங்களுக்குப் பிறகு சேதமடைந்தது.

சென்னையைச் சேர்ந்த ஒரு நன்கொடையாளர், குறிப்பாக கிளைமர் மற்றும் டிக்சன் கொலம்பிய இரும்பு கழுகு அச்சகம், தற்போது அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பல சுற்றுலாப் பயணிகள் தரங்கம்பாடியைப் பார்க்க வருகிறார்கள். இந்த அச்சகத்தைப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவுக் கட்டணமாக ரூ.20 வசூலிக்கப்படுகிறது.

வாலிபர் பகுதி...

# அத்திமரத்தை பட்டுப்போகச் செய்தார்

## மத்தேயு 21:18-22; மாற்கு 11:12-19

பிரியமான வாலிபர்களே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

### அத்திமரம்:

அத்திமரத்தைப் பற்றிய செய்தி வேதத்தில் ஏறக்குறைய 52 இடங்களில் வருகிறது. ஆதாமும், ஏவாளும் பாவம் செய்த பின்னர் அத்திமரத்தின் பின்னால் ஒளிந்து நின்றனர். அத்தியிலைகளை எடுத்து தங்களை மறைத்துக் கொண்டதைப் பார்க்கிறோம்.

### இயேசு அத்திமரத்தை சபித்தார்:

மத்தேயு 21 : 18,19 காலையிலே இயேசு நகரத்துக்குத் திரும்பி வருகையில், அவருக்குப் பசி உண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப் போயிற்று.

இயேசு பெத்தானியாவில் தங்கிவிட்டு நகரத்துக்குத் திரும்பி வரும் போது பசி உண்டாயிற்று. அப்பொழுது வழியருகே தூரத்திலே ஒரு அத்திமரத்தைக் கண்டார். அதன் பக்கத்தில் போய்ப் பார்த்தபோது, அந்த மரத்தில் இலைகள் மட்டுமே இருந்தது. கனிகள் இல்லை. அத்திமரத்தின் தன்மை என்னவென்றால். அது பூ பூக்க ஆரம்பித்ததும், அதில் இலைகள் எல்லாம் உதிர்ந்து விடும். அந்த மரம் முழுவதும் பூவாகக் காட்சியளிக்கும். அந்தப் பூவிலிருந்து பிஞ்சு தோன்றும். அப்போது இலைகள் துளிர்க்க ஆரம்பிக்கும். அத்திமரம் இரண்டு மாதம் தவிர மற்ற மாதங்களில் கனி கொடுக்கும். கனி கொடுக்கும் காலத்தில் கனிகளோடு ஏராளமான இலைகளும் அதில் காணப்படும். இலைகள் இருந்தால் கனி கட்டாயமாக இருக்கும். அதைத் தான் இயேசு எதிர்பார்த்தார். இலைகளால் இயேசுவின் பசியைத் தீர்க்க முடியாது.

இன்றைக்கும் பெரும்பாலான கிறிஸ்தவர்களிடம் இலைகள் தான் காணப்படுகின்றன. கனிகள் இல்லை. மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அத்தி மரத்தில் வேர், இலை, போல, இக்காலச் சபைகளிலும் பணம், மக்கள் பலம் போன்ற வசதிகள் அனைத்தும் அதிகமாக உண்டு. ஆவியின் கனிகளோ (கலாத்தியர் 5:22,23) இல்லை. புதிய ஆத்துமாக்களைக் கிறிஸ்துவிடம் சேர்க்கும் பணியும் மிகவும் குறைவு. ஆவியின் கனி இல்லாத கிறிஸ்தவ வாழ்வு சாபத்திற்குரியது. அத்தி மரத்தில் கனி இல்லாததால், இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாமல் இருக்கக்கடவது என்றவுடன் அத்திமரம் பட்டுப் போயிற்று. கனி தராத மக்கள் சாபத்தை அடைய நேரிடும் என்ற எச்சரிப்பை தருவதற்காகவும், தனது ஆற்றலைக் காண்பிக்கவும், அத்தி மரத்தை இயேசு சபித்தார் (யோவான் 15:4-6).

இயேசுவுக்குப் பசி உண்டானதினால், அவர் மனிதத் தன்மை உடையவராக இருந்தார் என்பதை அறிகிறோம். அத்திமரமானது இஸ்ரயேல் மக்களைக் குறிக்கிறது. இயேசு இஸ்ரயேல் தேசத்துக்கு வந்தபோது, இஸ்ரவேல் மக்களிடம் எந்தக் கனியும் காணப்படவில்லை. தேவன் இஸ்ரயேல் மக்களுடைய வாழ்க்கையிலே கொடுத்திருந்த காரியங்களை, ஜீவனற்ற சடங்காச்சாரங்களாகவும், வல்லமையற்ற வாழ்க்கை முறையாகவும் மாற்றி விட்டனர். அதனால் தேவன் இஸ்ரயேல் ஜனங்களைக் கடிந்து கொண்டார். கனியற்ற காலம் என்பது, இஸ்ரயேல் ஜனங்கள் இரட்சிப்படையாததைக் குறிக்கிறது. அத்திமரத்தைச் சிருஷ்டித்தவருக்கு அதைப் பட்டுப் போகச் செய்யவும் அதிகாரம் உண்டு. அத்திப்பழக் காலம் இல்லாமல் இருந்த போதும், வழியோரம் நின்றபடி அடர்ந்த இலைகளால் தனக்குள் கனியுள்ளது போலக் காட்டி மக்களை ஏமாற்றி வந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

### இயேசுவின் உபதேசம்:

மத்தேயு 21 : 20, 21 சீஷர்கள் அதைக்கண்டு: இந்த அத்தி மரம் எத்தனை சீக்கிரமாய்ப் பட்டுப் போயிற்று! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால், இந்த அத்தி மரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இயேசுவின் வார்த்தை வல்லமையாக இருக்கிறபடியினால் அவர் எதைப் பேசினாலும் அது நடந்தேறும். தேவன் இவ்வாறும் வல்லமையாகச் செயல்பட முடியும் என்பதை அவர்கள் விசுவாசிக்க வேண்டும் என்பதற்காக அவர்களைத் தைரியப்படுத்தினார். இன்று அத்திமரத்தைச் சபிக்கவும், மலைகளைப் பெயர்க்கவும் வேண்டியதில்லை. போ என்றாலே போகும் என்கிறார். சங்கீதம் 121: 1,2 ல் கூறியதைப் போல ஒத்தாசை வரும் பர்வதங்களைத் தான் நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் விடப் பெரிய காரியம் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிப்பதுதான். வேத வசனங்களை நாம் மற்றவர்களுக்குக் கூறும்போது, ஆவியானவர் நம்மை வழி நடத்துவார். குறைவுள்ள மனிதர்களாகிய நம் உதடுகளின் மூலமாகப் போகிற கர்த்தருடைய வார்த்தையைக் கூட கர்த்தர் எடுத்து பயன்படுத்துகிறார் என்ற விசுவாசம் நமக்கு அதிகமாகத் தேவை. ஒருவிசை சந்திரரோகியாய் வேதனை போட்டுக்கொண்டிருந்த அவன் மகனை சீஷர்களிடம் கொண்டு வந்து அவர்களால் குணமாக்க முடியவில்லை. அப்பொழுது இயேசு

மத்தேயு 17:20-ல் அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப்பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

## ஜெபம் குறித்து இயேசு:

மத்தேயு 21:22 மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.

இயேசு நமது சிருஷ்டிகர் ஆதலால் நம்மை சிருஷ்டிக்கும் போதே ஒரு திட்டத்தோடும், சித்தத்தோடும் சிருஷ்டித்தார். எனவே நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டு, அந்த சித்தத்தின் பிரகாரம் நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இந்த அத்திமரத்துக்கு அவர் செய்ததிலிருந்து அவர் படைத்த அனைத்தும் அவரது வார்த்தைக்கு செவி கொடுக்கிறது. கடல் அலைகளைப் பார்த்துப் பேசியபோது அது அமைதியாயிற்று. இயேசு இங்கு ஜெபத்தைக் குறித்த பாடத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். எப்பொழுது ஜெபித்தாலும் விசுவாசம் தேவை என்பதை உணர்த்துகிறார். விசுவாசம் உங்களுக்கு இருக்குமானால் ஜெபத்தில் கேட்பதையெல்லாம் பெற்றுக் கொள்வீர்கள் என்கிறார். எனவே நாம் ஏசாயா 40:29-ல் சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார் என்றும், பிலிப்பியர் 4:13-ல் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலன் உண்டு.

மத்தேயு 7:7,8-ல் கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

என்ற வார்த்தைகளை விடாமல் விசுவாச அறிக்கையிட்டு, நமக்கு பலத்தையும் சத்துவத்தையும் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்வோம். கனியில்லாததால் இயேசு அத்திமரத்தைச் சபித்தார். நம்மையும் கர்த்தர் தெரிந்துகொண்டதின் நோக்கம் நாம் இயேசுவுக்குள் கனி கொடுக்கிறவர்களாக மாறவேண்டுமென்பது தான். அத்திமரம் பசுமையாய் இருந்ததைப் போல நாமும் பசுமையாயிராமல் காரணம் இயேசு எதிர்பார்த்த கனி அவர்களிடம் இல்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் கனி கொடுக்கிறவர்களாக ஆகப் பிரயாசப்படுவோம். ஆமென்.

– உங்கள் அண்ணன் **JP**

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-

**No. 92 4421 4421**

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

# யோபுவின் துன்பமும் இன்பமும்

**(யோபு 1ம் அதிகாரம்)**


கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைங்களா! எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா? பரிசுத்த கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இந்த மாதம் நாம் அனைவரும் சேர்ந்து யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனிதனைக் குறித்து நாம் படிக்கப்போகிறோம். படிக்கலாமா? வாங்க படிக்கலாம்.

ஊத்ஸ் என்னும் நாட்டிலே யோபு என்ற பெயரைக் கொண்ட ஒரு மனிதன் வாழ்ந்து வந்தான்.அந்த மனிதன் கடவுளுக்கு பயந்தவனும், நேர்மையான எண்ணம் கொண்டவனும், கர்த்தர் சொன்னபடி ஒழுக்கமுள்ள மனிதனாக வாழ்ந்து, வீண் சண்டைகளுக்கு விலகுகிறவானாய் இருந்தான் என்று பைபிள் சொல்லுகிறது. யோபுவிற்கு ஏழு மகன்களும் மூன்று மகள்களும் இருந்தனர். மேலும் யோபுவிற்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளும் இருந்தது. இந்த கால்நடைகளை மேய்ப்பதற்கு நிறைய பணிவிடைக்காரர்களும் இருந்தனர்.

கர்த்தரே யோபுவைக் குறித்து சாட்சி கொடுத்தார். இப்படி யோபு மிகவும் ஆனந்தமாக வாழ்ந்துகொண்டிருக்கும் பொழுது, சாத்தான் ஒருநாள் கர்த்தருக்கு முன்பாக வந்து நின்றான் அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி என் தாசனாகிய யோபுவின் மீது கவனம் வைத்தாயா என்று கேட்டார். அதற்கு சாத்தான் கர்த்தரை நோக்கி, நீங்கள் யோபுவிற்கு நிறைய ஆசீர்வாதங்களை கொடுத்திருக்கிறீர் அதனால்தான் அவன் உங்கள்மீது விசுவாசம் வைத்திருக்கிறார் என்று சாத்தான் கர்த்தரிடம் சொன்னான். அதற்கு கர்த்தர் சாத்தானிடம், அவனுக்கு சொந்தமான அனைத்தையும் உன் கைகளில் தருகிறேன். ஆனாலும் என் தாசனாகிய யோபுவின்மீது உன் கையை நீட்டாதே என்று கட்டளையிட்டார். பிள்ளைகளா கர்த்தருக்கு யோபுவின்மீது எவ்வளவு நம்பிக்கை பார்த்தீர்களா?

பின்பு ஒருநாள் யோபுவினுடைய அனைத்து கால்நடைகளையும், யோபுவினுடைய அனைத்து மகன்கள், மகள்களையும் சாத்தான் எடுத்துக்கொண்டான். ஆனாலும் யோபு கர்த்தரை மறுதலிக்கவில்லை. மேலும் யோபுவிற்கும் உடல் முழுவதும் கொடிய பருக்களை சாத்தான் வரவைத்தான், யோபு ஒரு ஓட்டை எடுத்து தன்னுடைய உடலை மண் ஓட்டினால் சுரண்டிக்கொண்டு இருந்தான். அப்பொழுதும் அவன் கர்த்தரை மறுதலிக்கவில்லை. மகன்களையும், மகள்களையும்,



அனைத்து சொத்துக்களையும் பறிகொடுத்த யோபுவின் மனைவி, அவரைப் பார்த்து, கர்த்தரை தூசித்து, ஜீவனை விடுங்கள் என்று சொன்னாள். அதற்கு யோபு தன்னுடைய மனைவியைப் பார்த்து பயித்தியக்காரி பேசுவதுபோல நீ பேசுவது என்ன? கர்த்தரிடம் நன்மையைப் பெற்றுக்கொண்ட நாம் தீமையையும் பெறவேண்டாமா என்று சொன்னான். யோபு தன்னுடைய விசுவாசத்தில் நிலைத்து நின்றான். கர்த்தர் யோபுவின் விசுவாசத்தைக் கண்டு மகிழ்ந்தார். பின்பு கர்த்தர் முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு ஆசீர்வதித்தார் (யோபு 1:20,21).

கர்த்தருக்குப் பிரியமான செல்லப் பிள்ளைகளா யோபுவின் விசுவாசத்தைப் பார்த்தீர்களா!!!. நாம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படும்போது மாத்திரமல்ல, துன்பமான வேளைகளிலும் கர்த்தரை தூசிக்காமல் கர்த்தரிடம் விசுவாசமாக இருக்கும்போது, கர்த்தர் நம்முடைய துன்பத்தை இரண்டுமடங்கு இன்பமாக மாற்றுவார் என்பதை நாம் கற்றுக்கொண்டோம். நாமும் யோபுவைப் போல கர்த்தர்மேல் விசுவாசம் வைப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 5:2**

"நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்; என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்."

**– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்**

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யோபு எதில் உறுதியாய் நிலைத்து நின்றார்? அதற்கு கர்த்தர் தந்த ஆசீர்வாதம் என்ன?
2. நாபால் தாவீதின் ஊழியக்காரிடத்தில் சொன்னது என்ன?
3. கர்த்தர் ஆபிரகாமிடம் கேட்டது என்ன? அதற்கு கர்த்தரிடம் அவர் கேட்டது என்ன?
4. மோசே எந்த தேசத்தை வேவுபார்க்க எத்தனை பேரை அனுப்பினார்?
5. நற்செய்தி சொன்ன இருவர் பெயர் என்ன?

# நன்றியற்ற நாபால்

**( 1 சாமுவேல் 25ம் அதிகாரம் )**



கர்த்தருக்கு பிரியமான குட்டிச் செல்லங்களா இந்த மாதம் கிருபை உள்ள பத்திரிகையின் வாயிலாக உங்களோடு பேசுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாதம் நன்றியற்ற ஒரு மனிதனை குறித்து நாம் படிக்கலாம். மாகோன் என்னும் ஊரிலே ஒரு மனுஷன் இருந்தான். அவன் பெயர் நாபால், அவனுக்கு அபிகாயில் என்னும் பேர்கொண்ட மனைவியும் இருந்தாள். அந்தப் பெண் மகாபுத்திசாலியும் அழகு நிறைந்தவளாக இருந்தாள். அந்த நபாலுக்கு தொழில்துறை ஒன்று கர்மேலிலே இருந்தது. அவன் மிகப்பெரிய செல்வந்தனாகவும் இருந்தான். அவனுக்கு மூவாயிரம் ஆடுகள், ஆயிரம் வெள்ளாடுகளும் இருந்தது. அவன் தன் தொழிற்சாலையில் ஆடுகளுக்கு மயிர்க் கத்தரித்துக் கொண்டிருந்தான்.

இந்த காரியங்கள் நடந்தேறுவதற்கு முன்பே, நாபாலின் ஆடுகளை தன் வேலைக்காரர்கள் வனாந்தரத்தில் மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது, தாவீதும் அவனுடைய ஆட்களும் சந்தித்து பேசி உள்ளார்கள். நாபாலின் வேலைக்காரரையும் ஆடுகளையும் அவர்களின் உடமைகளையும் பாதுகாத்து அவர்களுக்கு உதவி செய்து வந்தனர். தாவீது நாபாலின் வேலைக்காரரை நோக்கி நீங்கள் உங்கள் எஜமானை சந்திக்கும் பொழுது நாங்கள் உங்களுக்கு செய்த உதவியையும் பாதுகாப்பையும் குறித்து சொல்லுங்கள். எங்களுக்கு உதவி என்று வரும்பொழுது உங்களிடம் கேட்போம் என்று சொல்லி அனுப்பினான். அவ்வாறே ஒரு நாள் தாவீது தன் பத்து வாலிபரை அழைத்து நீங்கள் கர்மேலுக்கு போய் நாபால் இடத்தில் சென்று என் பேரைச் சொல்லி அவன் நலத்தை விசாரித்து உமக்கு சமாதானம் உண்டாவதாக, உம்முடைய வீட்டுக்கு சமாதானம் உண்டாவதாக, உம்முடைய எல்லா உடைமைகளுக்கும் சமாதானம் உண்டாவதாக என்று சொல்லி அவனை வாழ்த்துங்கள். உம்முடைய மேய்ப்பர் எங்களோடு கூட இருந்தார்கள் அவர்கள் கர்மேலில் இருந்த நாளெல்லாம் நாங்கள் அவர்களை வருத்தப்படுத்தவில்லை.

உங்கள் வேலைக்காரரின் பொருட்களை பத்திரமாக நாங்கள் பாதுகாத்தோம். அப்படியானால் உம்முடைய வேலைக்காரரை கேளும் அவர்கள் சொல்வார்கள். ஆதலால் இந்த வாலிபருக்கு உன்னுடைய கண்களிலே தயவு கிடைக்க வேண்டும் நல்ல நாளில் வந்தோம் உம்முடைய கைக்கு உதவுவதை எங்களுக்கும் எங்களை அனுப்பின தாவீதிற்கும் கொடுக்கும்படி வேண்டுகிறேன் என்று சொல்லுங்கள் என்றான். தாவீது சொன்னது போலவே அந்த பத்து வாலிபரும் நாபால் இடத்தில் போய் இந்த வார்த்தைகளை எல்லாம் தாவீதின் நாமத்தினாலே சொல்லி வேறொன்றும் பேசாமல் இருந்தார்கள். இதைக் கேட்ட நாபால் தாவீதின் ஊழியக்காரருக்கு மறுமொழியாக தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் எஜமான்களை விட்டு ஓடிப் போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு நான் எதற்காக கொடுக்க வேண்டும். அவன் எப்படிப்பட்டவன் நான் ஒன்றும் தர இயலாது. நீங்களே இந்த இடத்தை விட்டு ஓடிப் போய் விடுங்கள். இல்லையென்றால் கொன்று விடுவேன் என்று அவர்களை அலட்சியமாக எண்ணி அவர்களை அனுப்பி விட்டான். இந்த பத்து வாலிபரும் தாவீதிடம் சென்று நாபால் சொன்ன அனைத்து விவரங்களையும் அவனுக்கு அறிவித்தார்கள்.

அப்பொழுது தாவீது மிகவும் கோபம் அடைந்து, தன்னிடம் உள்ள 400 பேரை அழைத்துக் கொண்டு நாபாலை அழிக்கும்படி போனான். இருநூறு பேரை தன் பொருட்களை பாதுகாக்கும் படியாகவும் மற்ற இருநூறு பேரை தன்னோடு அழைத்துச் சென்று நாபாலை அழிக்கும்படியாகவும் சென்றார்கள். இதை வனாந்திரந்தத்தில் இருந்த நாபாலின் வேலைக்காரர்கள் கண்டு அவர்களுக்கு முன்பாக ஓடி நாபாலின் மனைவியாகிய அபிகாயிலிடத்தில் இந்த செய்தியை அறிவித்தார்கள். நாபாலின் மனைவி அபிகாயில் மிகவும் புத்திசாலித்தனமாக தன்னிடம் உள்ள பொருட்களையும் ஆடுகளையும், வற்றலான திராட்சை பழங்களையும், அத்தி பழத்தின் அடையையும் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு முன்பாக போய் தாவீதை ஒரு இடத்தில் சந்தித்து அங்கே தன் கணவனுக்கு வரக்கூடிய தீங்கை குறித்து தாவீதோடு தாழ்மையாக பேசக் கூடியவளாக இருந்தாள். அப்பொழுது தாவீது அபிகாயிலின் பேச்சைக் கேட்டு திரும்பி போய் விட்டான். சில நாளுக்குள்ளே அபிகாயிலின் கணவன் நாபால் கர்த்தராலே அடிக்கப்பட்டு பத்து நாளுக்குள்ளே அவன் மரித்தும் போனான்.

கர்த்தருடைய செல்ல பிள்ளைகளே! இந்த சிறுவயதில் நாபாலிடம் இருந்து கற்றுக்கொள்ள கூடாத காரியத்தில் கவனமாய் இருங்கள். ஏனென்றால் நன்மை செய்தவர்களுக்கு பதில் தீமை செய்யக்கூடாது. கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் எத்தனையோ நன்மைகளை செய்து இருக்கிறார். அன்புமிக்க தாயையும், தாங்கி சுமந்து செல்லக்கூடிய தகப்பனையும், ஆறுதல் அளிக்கக்கூடிய சகோதர சகோதரிகளையும், தோள் கொடுக்கக்கூடிய நண்பர்களையும் கர்த்தர் உங்களுக்கு கொடுத்திருக்கிறார். கர்த்தருக்கு நன்றி உள்ளவர்களாக இருங்கள். உங்கள் பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றி உள்ளவர்களாக இருங்கள். உங்களுக்கு உதவி செய்தவர்களை இயன்ற அளவும் நினைத்துப் பாருங்கள். உதவி என்று கேட்பவர்களுக்கு நீங்கள் உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்களாக இருங்கள்.

நம் கர்த்தராகிய இயேசுவானவர் தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்தார். இந்த உறுதி மொழியை உங்கள் மனதிலே பதிய வையுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**மனப்பாட வசனம்: ரோமர் 12:21**

"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு."

– சகோ. பீட்டர்

# கடவுள் மீது அன்பு செலுத்துதல் ஆபிரகாம்

**( ஆதியாகமம் 22ம் அதிகாரம் )**

கடவுளுக்கு பிரியமான குட்டிப் பிள்ளைகளா! நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?

கடவுள் உங்களை எல்லாவற்றிலேயும் பாதுகாத்து ஆசீர்வதிப்பாராக. இந்த மாதம் நாம் கடவுள் மீது அன்பு வைத்த ஆபிரகாமைப் பற்றி நாம் சேர்ந்துக் கற்றுக்கொள்ளலாமா?

பிள்ளைகளா! பல வருடங்களாக குழந்தை பிறக்காமல், ஏங்கிய ஆபிரகாம் தம்பதியினருக்கு, கர்த்தர் பெரிய ஆசீர்வாதமாக ஒரு ஆண் குழந்தையை கொடுத்தார். அந்த குழந்தை பெயர் என்ன தெரியுமா? ஈசாக்கு, இந்த ஈசாக்கை ஆபிரகாம் ரொம்ப பாசம் காட்டி வளர்த்தார், இது கர்த்தருக்கும் தெரியும், மிகவும் செல்லமாக ஈசாக்கை வளர்த்தார்.

கடவுள் என்ன செய்தார் தெரியுமா? ஆபிரகாமே நீ செல்லமாக வளர்த்த உன் பிள்ளையை எனக்குத்தா! என்று கர்த்தர் கேட்டார், நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்? உங்களுக்கு பிடித்த விளையாட்டு பொருள், உங்களுக்கு ரொம்ப பிடித்த உணவு, இப்படி ஏதாவது உங்களுக்கு ரொம்ப பிடித்திருக்கிறதா? அதை கடவுள் எனக்குக்கொடு என்று கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? கர்த்தர் கேட்டால் கொடுக்க முடியுமா?

ஆனால், ஆபிரகாம் என்ன செய்தார் தெரியுமா? குட்டீஸ்! ஆண்டவர் உன் பிள்ளையை கொடு என்று கேட்டதும் கர்த்தருக்கு கீழ்படிந்து, எங்குபோய் பலிசெலுத்தனும் என்று ஆண்டவர் சொல்கிறாரோ, அங்கு புறப்பட்டு சென்றார். தேவன் தாமாகவே கொடுத்ததை திரும்பவும் ஏன் பறிக்கிறார்? என்று ஆபிரகாம் எண்ணியிருக்கலாம். ஆனால் கடவுள் மீது அன்பு வைத்ததினால் தன் பாசத்திற்குரிய பிள்ளையை பலிகொடுக்க சென்றார்.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! நீங்களும் கடவுளை நேசிக்கிறீர்களா! பள்ளிக்கூட பாடங்களை எவ்வளவு படிக்கிறீர்களோ, அதேப்போல பைபிள் படிக்கிறீர்களா? நீங்கள் ரொம்ப விரும்புவது பொருளாக இருக்கலாம், நேரமாக இருக்கலாம், நண்பர்களாக இருக்கலாம், ஏன் உங்கள் பொழுதுபோக்காக இருக்கலாம் அதை கடவுளுக்கு கொடுத்து உங்கள் அன்பை வெளிபடுத்துவீர்களா?

ஆபிரகாம் தேவன் ஊரைவிட்டு போகச் சொன்னார். அவர் அந்தபடியே போனார். உறவுகளை விட்டுபோக



சொன்னார் அவ்வாறும் செய்தார். உங்கள் அம்மா, அப்பா, ஊழியர் சர்ச்சுக்கு போக சொன்னால், போவீர்களா? பைபிள் படிக்கசொன்னால், படிப்பீர்களா? ஜெபிக்க சொன்னால் ஜெபிப்பீர்களா? ஆபிரகாம் தன்னைவிட, தன் பிள்ளையை நேசிப்பதைவிட, தன் குடும்பத்தை நேசிப்பதைவிட கடவுள் மீது அன்பு வைத்தார். நீங்களும் கடவுளை நேசிப்பீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: உபாகமம் 6:5**

"நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக"

**– சகோ. அன்பு ஏசுதாஸ்**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | A. ஹானா ஜோதிராணி | - | மதுரை |
| 2. | M. அபி பிலேமோன் | - | எழுகம்வலசு |
| 3. | J. நவீன் பீட்டர் | - | மதுரை |
| 4. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - | மதுரை |
| 5. | S. ஜூடா லியோ | - | ரஸ்தா |
| 6. | G. ஜெர்லின் | - | ரஸ்தா |
| 7. | M. ஜோனத்தான் | - | கரூர் |
| 8. | V. ஏஞ்சல் ஜோயன்னா | - | மதுரை |
| 9. | A. சுபிக்ஷா | - | பெருமாள் வலசு |
| 10. | A. சாம்குமார் | - | பெருமாள் வலசு |
| 11. | D. டேப்னி | - | சென்னை |
| 12. | D. ஜூனித்தா | - | சென்னை |

# 12 வேவுக்காரர்கள்

**(எண்ணாகமம் 13,14ம் அதிகாரங்கள்)**


கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளே! எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நலமாயிருப்பீர்கள் என்று ஆண்டவருக்குள் நம்புகிறேன்.

எல்லாரும் காலாண்டு விடுமுறை முடிந்து, பள்ளிக்கு மீண்டும் போயிருப்பீர்கள். இந்த காலாண்டு விடுமுறை நாட்களை பயனுள்ளதாக செலவிட்டிருப்பீர்கள்தானே. பிள்ளைகளே! இந்த மாதமும்கூட நாம் ஒரு வேதாகம சம்பவத்தைப் பற்றி படிக்க விருக்கிறோம்.

கர்த்தர் மோசேயை அழைத்து, அவரிடம் நான் இஸ்ரயேல் ஜனங்களுக்கு கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; இஸ்ரயேலிலே 12 கோத்திர ஜனங்கள் உள்ளார்கள் அல்லவா!. அவர்களில் ஒவ்வொரு கோத்திரத்திலும், ஒவ்வொரு நபரை தெரிந்துகொண்டு ஆகமொத்தம் 12 பேரை கானான் தேசத்திற்கு அனுப்பு என்று கர்த்தர் சொன்னார்.

மோசே கடவுள் சொன்னபடியே, கானான் தேசம் எப்படிப்பட்ட தென்றும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ, கொஞ்சம்பேரோ அநேகம்பேரோ என்றும், அது நல்லதோ கெட்டதோ என்றும், அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்றும், நிலம் எப்படிப்பட்டது, அதில் மரங்களில் கனிகள் உண்டோ இல்லையோ என்றும் இப்படி பல காரியங்களைச் சொல்லி 12 பேரை தெரிந்தெடுத்து அனுப்பினான்.

அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்குமட்டும் போய், கானானைச் சுற்றிப்பார்த்து, அங்கே ஒரே குலையுள்ள ஒரு திராட்சக்கொடியை அறுத்தார்கள்; அதை ஒரு தடியிலே இரண்டுபேர் கட்டித் தூக்கிக்கொண்டுவந்தார்கள்: அந்த அளவுக்கு அது மிகப்பெரிய பழமாக இருந்தது. அவ்வாறே மாதளம்பழங்களிலும், அத்திப்பழங்களிலும் சிலவற்றையும் எடுத்துக்கொண்டு, மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் வந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் அங்கு அவர்கள் கண்ட எல்லாவற்றையும் அறிவித்து, அந்த தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள். அவர்கள் மோசேயை நோக்கி: நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி என்றும் சொன்னார்கள்.



ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம் என்றும், நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்று அங்கே சென்ற 12 பேரில் 10 பேர் இப்படி இஸ்ரயேல் ஜனங்களுக்குள்ளே தாங்கள் சுற்றிப்பார்த்து வந்த தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள். அதனால் இஸ்ரயேல் ஜனங்களுக்கு மிகவும் பயமும், துக்கமும் உண்டானது. அவர்கள் நாங்கள் எகிப்திலே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமென்று மிகவும் சத்தமிட்டு கூக்குரலிட்டு அழுதார்கள்.

ஆனால், தேசத்தை சுற்றிப்பார்க்கப்போன 12 பேரில் 2 பேர் (யோசுவா, காலேப்) மாத்திரமே நற்செய்தியை சொன்னார்கள். அதென்னவெனில், நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார். அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை என்றார்கள்.

பிரியமான குட்டீஸ்! இந்த சம்பத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? நாம் மற்றவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையும், கர்த்தரின்மேல் உள்ள நம்பிக்கையும் மற்றவர்களுக்கு சொல்கிறவர்களாய் இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அவருக்கு மிகவும் பிடித்த காரியம் நற்செய்தியை எல்லாருக்கும் சொல்ல வேண்டும் என்பதுதான். வேதனையோடும், வலியோடும், தேவையோடும் இருக்கிறவர்களுக்கு நாம் நம்மால் முடிந்த உதவியை செய்ய வேண்டும். நாம் பேசுகிற வார்த்தைகள் அவர்களுக்கு ஆறுதலாய் இருக்க வேண்டும். அப்படி செய்வீர்களா? குட்டீஸ். அடுத்த இதழில் சந்திப்போமா!

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 16:7**

"ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்"

– சகோ. ஜான் செல்லையா

# அக்டோபர் மாத கேள்விகள்
## (ரோமர் புத்தகத்தில் இருந்து)

1. இரக்கஞ்செய்கிறவன் எப்படி செய்யக்கடவன்?
2. நம்மை யார் என்று எண்ணக்கூடாது?
3. எல்லா மனுஷரோடும் எப்படி இருக்க வேண்டும்?
4. ஒருவரிடத்திலொருவர் எந்த கடனேயல்லாமல் மற்றொன்றிலும் கடன்படக் கூடாது?
5. நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் யாருக்கென்று விசேஷித்துக் கொள்கிறான்?
6. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாக எவைகளைப் போடக் கூடாது?
7. தேவனுடைய ராஜ்யம் எப்படிப்பட்டதல்ல?
8. விசுவாசத்தினால் வராத யாவும் எது?
9. பொறுமையும், ஆறுதலும் எதினால் உண்டாகிறது?
10. பரிசுத்த ஆவியின் பெலத்தினால் பெருகுவது எது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-11-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 9:33 | 6. ரோமர் 10:21 |
| 2. ரோமர் 10:33 | 7. ரோமர் 11:4 |
| 3. ரோமர் 10:14 | 8. ரோமர் 11:17 |
| 4. ரோமர் 10:15 | 9. ரோமர் 11:33 |
| 5. ரோமர் 10:17 | 10. ரோமர் 12:1 |

## சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | கரூர் |
| 2) | G. ஏஞ்சலம்மாள் | மதுரை |
| 3) | D.I. அன்பு சுதந்திரம் | ஏர்வாடி |
| 4) | S. ஜெபமணி | தென்காசி |
| 5) | S. ஆலன் காலேப் | இராணிபேட்டை |
| 6) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | சேலம் |
| 7) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | மதுரை |
| 8) | R. ஞானசிரோன்மணி | மதுரை |
| 9) | C. வைலட் கிறிஸ்டோபர் | தளவாய்புரம் |
| 10) | Mr. டேவிட் ராஜ் | அனவரதநல்லூர் |
| 11) | Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் | தூத்துக்குடி |
| 12) | J. ஜான்சி | ஆனைமலை |
| 13) | S. அசோக்குமார் பிரின்ஸ் | தூத்துக்குடி |
| 14) | Mrs. தெல்மா ஸ்டான்லி | மதுரை |
| 15) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 16) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | படப்பை |
| 17) | Mrs.P. சமாதானம் பீட்டர் | விருதுநகர் |
| 18) | Mrs. ஹெலன் திலக் | தூத்துக்குடி |
| 19) | M. ஈஸ்வரி முருகன் | கரூர் |
| 20) | M. ராஜா | கரூர் |
| 21) | P.S. ருக்மணி | ஈரோடு |
| 22) | Mrs.D. குளோரி திலகவதி | சென்னை |
| 23) | M. அன்பழகன் | தங்கமேடு |
| 24) | Mrs. J. பூங்கொடி | முத்தூர் |
| 25) | Y. ஜெயசுதா பொன்செல்வி | சென்னை |
| 26) | S. பேபி சந்தோஷ்குமார் | தங்கமேடு |
| 27) | S. பாக்கியராஜம் | மதுரை |
| 28) | Mrs. ராணி குமரன் | கரூர் |
| 29) | Mrs. J. ஜெயராணி ஜான் | மதுரை |
| 30) | N. ஜான் செல்லையா | மதுரை |
| 31) | P. ரேச்சல் ஜானிமா | நெல்லை |
| 32) | Mrs. சாந்தி வில்லியம் | புதுக்கோட்டை |
| 33) | A. லலிதா | புதுக்கோட்டை |
| 34) | Mrs. ஆட்லின் ஆனந்தன | மதுரை |
| 35) | Mrs. R. சரோஜா | தென்கலம் |
| 36) | A. அரவிந்த் | மதுரை |
| 37) | M.S. ஜேம்ஸ் | திண்டுக்கல் |
| 38) | Mrs. பெட்ரீஷியா டேவிட் | சேலம் |
| 39) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 40) | Mrs. இந்திரா பாண்டி | மதுரை |
| 41) | Mr. தமிழரசன் | நாமக்கல் |
| 42) | M. பியூலா சாந்தி | ஈரோடு |
| 43) | Mrs. மேரி ராஜ் | மதுரை |
| 44) | S. டேவிட் சாந்தகுமார் | வல்லம் |
| 45) | A. ரோஸ்மேரி | சென்னை |
| 46) | Mrs. தேவி ராஜாசிங் | திருப்பூர் |
| 47) | V. மைனாவதி வசந்த் | தங்கமேடு |
| 48) | Mrs. பெரில் பாஸ்கர் | படப்பை |
| 49) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 50) | Mrs. சூரிய பிரியா | மதுரை |
| 51) | A. கார்பஸ் பிலேமோன் | மதுரை |
| 52) | P. ஷைனி | காங்கேயம் |
| 53) | S. கார்த்திக் | கரூர் |
| 54) | A. டேவிட் ஜெயசந்திரன் | மதுரை |
| 55) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 56) | Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | ஈரோடு |
| 57) | J.V. சுந்தரபாய் வில்லியம் | சேலம் |
| 58) | Mr. ராஜன் | மதுரை |
| 59) | Mr. தாமஸ் ராபின்சிங் | பெரம்பலூர் |

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2024 - 2026**
**Date of Publication : 9th October 2025**
**Posted at Arasaradi HPO on 10th & 11th October2025**



பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு
கொடுக்கப்பட்ட
அரிசி மற்றும் பலசரக்கு பொருட்கள்



திருச்சியில் நடைபெற்ற
பார்வையற்றோருக்கான சிறப்பு முகாம்



பார்வையற்றோருக்கு
கொடுக்கப்பட்ட ஆடியோ பைபிள்



பார்வையற்றோருக்கு கொடுக்கப்பட்ட
வாக்கிங் ஸ்டிக் (canes)



பார்வையற்ற மாற்றுத்திறனாளி நண்பர்களுக்கு
கொடுக்கப்பட்ட கண் கண்ணாடிகள்



பார்வையற்ற சகோதர சகோதரிகளுக்கு கொடுக்கப்பட்ட
பிரெய்லி மொழியில் எழுத உதவும் ஸ்லேட் மற்றும் ஸ்டைலஸ்



பார்வையற்ற மாற்றுத்திறனாளி நண்பர்களுக்கு
கொடுக்கப்பட்ட டாக்கிங் வாட்ச்





மதுரை மற்றும் திருச்சியில் சுமார் 300 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள்
5kg அரிசி மற்றும் பலசரக்கு பொருட்களை பெற்றுகொண்டனர்

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
**92 4421 4421, 92 4431 4431**

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers